(2) உடுகுறியிட்ட வினுக்களுக்கு உடுக்குறியிடப்படாத வினுக்களாக பதில்

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : உடுக்குறியிட்ட 23 வினுக் களுக்கு அரசிடமிருந்து கிடைக்கப் பெற்ற விடைகள், 1 முதல் 23 வரையில் உள்ள உடுக்குறியிடாத வினுக்களுக்குரிய விடைகளாக இன்று மேலவை முன்னர் வைக்கப்படுகின்றன என்று நான் அறிவிக் கிறேன்.

4. கவன ஈர்ப்பு.

தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்குக் கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படுதல், உரங்கள் கிடைக்காமை குறித்து.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : 42-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து திரு. ஜி. சுவாமி நாதன் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்ப்பார்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.—

"தஞ்சை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் வழங்குவதில் கால தாமதம் ஏற்படுதல், உரங்கள் கிடைக்காமை, அண்மையில் அரசு மேற்கொண்ட பாசனக் கால்வாய்களேப் புதுப்பிக்கும் பணியால் கால்வாய்களில் நீர் வரவின்மை ஆகியவற்ருல் துயருற்றுள்ளனர்".

* மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, கூட்டுறவுக் கடன்கள், மும்முர உரத் திட்டக் கடன்கள் :

கூட்டுறவுக் கடன்களைப் பொறுத்த வரையில் கும்பகோணத் திலும், தஞ்சாவூரில் உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள் இரண்டு மாகச் சேர்ந்து நடப்பாண்டில் 12—8—1972 வரை ரூ. 495.63 லட்சம் கடன் வழங்கி உள்ளனர். கடந்த ஆண்டில் இதே கால அளவில் ரூ. 372.58 லட்சம் அளவிற்கு மட்டுமே அவை கடன்கள் வழங்கின. மேலும் தஞ்சை மாவட்டத்தில் மும்முர உரத் திட்டத்தின்கீழ்